

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 25 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 18 – செவ்வாய்க்கிழமை 03 செப்டம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 25: Thiruvalluvar Year - 2055 - Aavani 18 - Tuesday 03 September 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## சான்பிரான்சிஸ்கோவில் முதலீட்டாளர்களுடன் சந்திப்பு!

# 8 நிறுவனங்கள் 1,300 கோடி ரூபாய் முதலீடு!





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 31.8.2024 அன்று சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சான் பிரான்சிஸ்கோவிற்கான துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, ஃப்ரீமாண்ட் மேயர் லில்லி மெய், ஃப்ரீமாண்ட் கவுன்சில் உறுப்பினர் ராஜ் சால்வான், சன்னிவேல் துணை மேயர் முரளி சீனிவாசன், குபெர்டினோ மேயர் ஷீலா மோகன், அமெரிக்க வாழ் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

**சான்பிரான்சிஸ்கோ, செப். 3 -**

**சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் 8 நிறுவனங்கள் 1300 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளன. இதனால் 4600 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, 39,000க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் என இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகவும் விளங்குகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, மனிதவளங்கள் மற்றும் திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

இத்தகைய சிறப்புகளை கொண்ட தமிழ்நாட்டில், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளைமேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற் கொண்டுள்ளார். சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் இதுவரை 8 நிறுவனங்களுடன் 4,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 1300 கோடி ரூபாய் முதலீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வாஞ்சையோடு என்னை அணைத்துக்கொள்ளும் உறவுகள்!**

அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**அன்னை மண்ணைப் பிரிந்து அயலகத்தில் இருக்கிறேன் என்ற உணர்வே எழாத வகையில் வாஞ்சையோடு என்னை அணைத்துக்கொள்ளும் நம் உறவுகள்!**

**தங்களது உழைப்பாலும் அறிவாலும் வாய்ப்புகளை அமைத்துக் கொண்டு அமெரிக்க நாட்டில் உயர்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு அன்பும் நன்றியும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சேலம் மாவட்டம் – மேட்டூரில்

# 5,947 கோடி ரூபாயில் நீரேற்று புனல் மின் நிலையம்!

**புரிந்துணர்வு கையெழுத்தான ஏழே நாட்களில் பணிகள் தொடக்கம்!**

சேலம், செப். 3 -

சேலம் மாவட்டம் மேட்டூரில் ஐந்தாயிரத்து 947 கோடி ரூபாயில் நீரேற்று புனல் மின் நிலையத்தை கிரீன்கோ எனர்ஜீஸ் நிறுவனம் அமைக்கிறது. தமிழ்நாடு அரசுடன் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான ஏழே நாட்களில் இந்நிறுவனம் பணியை தொடங்கி இருக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ம் ஆண்டிற்குள் ஒரு லட்சம் கோடி டாலருக்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முதலீடுகளை ஈர்த்து வருகிறார்.

இந்நிலையில் இந்தியாவில் முன்னணியில் இருக்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்களின் ஒன்றான கிரீன்கோ குழுமத்தைச் சேர்ந்த கிரீன்கோ எனர்ஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 20 ஆயிரத்து 114 கோடி ரூபாய் முதலீட்டில் ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில், தமிழ்நாட்டில் 3 நீரேற்று புனல் மின் திட்டங்களை நிறுவ முன்வந்துள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கடந்த 21ம் தேதி சென்னையில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஏழே நாட்களில் முதல்கட்ட பணிகளை கிரீன்கோ எனர்ஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொடங்கியுள்ளது.

அதன்படி முதலாவது நீரேற்று புனல் மின் நிலையத்தை, சேலம் மாவட்டம் மேட்டூரில், ஐந்தாயிரத்து 947 கோடி ரூபாயில் அமைக்க நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. பாலமலை மற்றும் நவிப்பட்டி கிராமங்களில் அமைக்கப்படவிருக்கும் இந்த நீரேற்று புனல் மின் நிலையத்திற்காக சுற்றுச்சூழல் அனுமதி கோரி கிரீன்கோ நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. முதல் கட்ட அனுமதி கிடைத்தும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மாநில கல்வித் திட்டம் தரமற்றதா? ஆளுநரின் அவதூறு கருத்து!

## அமைச்சர்கள் க.பொன்முடி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலடி!

**சென்னை, செப். 3 -**

**மாநில கல்வித் திட்டம் குறித்து தமிழ்நாடு ஆளுநரின் அவதூறு கருத்துக்கு அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தக்க பதிலடி கொடுத்துள்ளனர்.**

**உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி!**

இதுகுறித்து சென்னை காயிதே மில்லத் கல்லூரி 45 ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி பேசியதாவது:

2006 ஆம் ஆண்டே சமச்சீர் கல்வியை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் சி.பி. எஸ்.சி.க்கு நிகராக நம்முடைய அரசு பள்ளி பாடப்பிரிவும் திறன் பட இருக்கிறது. அதற்கு உதாரணம் இந்தியா மட்டுமல்லாமல் உலகமே பாராட்டுகின்ற இஸ்ரோவில் பணியாற்றும் நிலவை ஆராய்ச்சி செய்யும் வீர முத்துவேல். அரசு பள்ளியில் படித்து பாலிடெக்னிக் கல்லூரியிலும் பொறியியல் கல்லூரியிலும் படித்து சிறந்து விளங்குகிறார் என்றால் நம்முடைய உயர் கல்வி உடைய பாடப்பிரிவுதான்.

ட்ரோன் மூலம் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து தற்போது சிறந்து விளங்குகிறார்கள்





நம்முடைய பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கும் முதன்மையாக இருப்பது நம்முடைய பாடப்பிரிவு தான்.

பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வியில் நம்முடைய பாடப்பிரிவு சிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் தான் அனைத்து பல்கலைக்கழகத்திற்கும் சீரான பாடப்பிரிவை கொண்டு வந்தது திராவிட மாடல் ஆட்சியில்தான்.

படிக்கும் போதே திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என தமிழக முதலமைச்சரின் ஆழ்ந்த சிந்தனையில் உருவானது தான் நான் முதல்வன் திட்டம். இன்று 'நான் முதல்வன் திட்டம்' மூலம் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

கல்வி கூடங்கள் எண்ணிக்கை மட்டும் உயர்ந்தால் போதாது, கல்வித் தரத்தையும் உயர்த்த வேண்டும் அதுதான் நான் முதல்வன் திட்டம் முக்கிய நோக்கமாகும்.

அறிவுத்திறன் வாய்ந்த பாடத் திட்டங்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி வரை சிறந்த பாடத்திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள் கூறினார்.

**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!**

தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஆய்வக உதவியாளருக்கான பயிற்சி சான்றிதழ் மற்றும் பயிற்சி கட்டகம் வெளியீட்டு விழா திருச்சி தேசிய கல்லூரி பள்ளி மைதானத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்